# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## புதுப்பிக்கத்தக்க சக்தி துறையில் இலங்கையிலுள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கான திறன்களை உருவாக்குதல்

கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் பங்களிப்புடன், "இன்வெஸ்ட் இந்தியா" மற்றும் "சர்வதேச சூரியக்கல கூட்டமைப்பு" ஆகியவை இணைந்து இலங்கையிலுள்ள சூரியக்கல சக்தி துறை சார்ந்த புத்தொழில் (Start-up) நிறுவனங்களை ஒன்றிணைக்கும் ஒரு நாள் செயலமர்வை மே 8ஆம் திகதி அன்று ஏற்பாடு செய்திருந்தது. "SolarX Start-up Challenge: APAC Edition" குறித்தும் அதன் நன்மைகள் குறித்தும் பங்கேற்பாளர்களுக்கு அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதே இந்த நிகழ்வாகும். இந்த செயலமர்வில் "SolarX Start-up Challenge" இல் பங்கேற்பதன் மூலமான அம்சங்கள் மற்றும் நன்மைகளைச் சுட்டிக்காட்டும் விரிவான அமர்வுகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

2. இங்கு சிறப்புரை நிகழ்த்தியிருந்த இந்தியாவின் பிரதி உயர் ஸ்தானிகர் டாக்டர் சத்யாஞ்சல் பாண்டே அவர்கள், இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையின் வளர்ச்சி மற்றும் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் தொடர்பாக குறிப்பிட்டிருந்தார். இந்தத் துறையில் உள்ள இலங்கையின் புத்தொழில் நிறுவனங்களின் சுற்றுச்சூழலுக்கு ஆதரவளிப்பதற்காக வடிவமைக்கப்பட்டு அமுல்படுத்தப்படவுள்ள முயற்சிகள் குறித்தும் அவர் இங்கு குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் இலங்கையின் முன்னணி புத்தாக்க வளர் மையங்கள் (Incubators) மற்றும் பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகளும் உள்ளடங்குகின்றனர். .

3. உறுப்பு நாடுகளின் சூரிய சக்தி துறை எதிர்கொள்ளும் தொடர்ச்சியான சவால்கள் சிலவற்றிற்கான தீர்வுகளாக செயல்படுத்தக்கூடியதும், செலவு குறைந்த, அளவிடக்கூடிய மற்றும் புதுமையானதுமான வழிமுறைகளை ஒருங்கிணைப்பதை SolarX Startup

Challenge நோக்கமாகக் கொண்டுள்ளது. முதல் பதிப்பு ஆபிரிக்க பிராந்தியத்தை மையமாகக் கொண்டதாகும். ஒட்டுமொத்த திறன்களை மேம்படுத்துவதனை அடிப்படை இலக்காகக்கொண்டு புதுமைகளை மேம்படுத்துதல் மற்றும் உள்ளூர் தீர்வுகளைக் கண்டறிதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட இரண்டாவது பதிப்பு APAC பிராந்தியத்தின் மீது கவனம் செலுத்துகிறது. **இந்த சவாலானது வழிகாட்டுதல் மற்றும் சந்தை அணுகல் உதவிக்கான வாய்ப்புகளுடன் USD 15,000 பரிசையும் வழங்குகிறது.** இது தொடர்பான மேலதிக விவரங்களை https://www.investindia.gov.in/solarx-startup-challenge என்ற இணையதளத்தில் பெற முடியும்.

4. ஒட்டுமொத்தமாக, இந்நிகழ்வானது சூரிய சக்தி துறை சார்ந்த புத்தொழில் நிறுவனங்களின் முக்கிய பங்குதாரர்களிடையே ஒத்துழைப்பு மற்றும் அறிவுப் பகிர்வு ஆகியவற்றை ஊக்குவிக்கின்றது. அதே நேரத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் வளர்ச்சிக்கான அதிகரித்த வாய்ப்புகளையும் வலியுறுத்துகிறது.

***********

**கொழும்பு**
**9 மே 2024**